# வாழ்க அம்மா!



ஆண்டவனின் அவதாரமே அம்மா! - ஆனால்
ஆண்டவனே எமக்கு அம்மாவாக!

நிலா

கணபதி துணை

## அம்மாவுக்காக

ஈரைந்து மாதம் எம்மைச் சுமந்தவள்!
எமக்காய்த் தன்னையே தாரை வார்ப்பவள்
என்றும் எமக்காய் ஆக்கித் தேய்ந்தவள்
எம்முன்னேற்றமே குறியெனக் கொண்டவள்

பொன்னின் குணத்தவள் பொறுமையின் சேயவள்
கண்ணின் இமையாய்க் கவனமாய்க் காப்பவள்
கண்டனம் செய்கையில் கனதி தெரிந்தவள்
குன்றின் மணியென குலத்துள் திகழ்பவள்

மன்றத்து முன் எம்மை மதிப்புற வைப்பவள்
என்றன் தந்தையின் இதயம் நிறைந்தவள்
தன்றாய் தந்தைக்கு புத்திரனாய்ச் செயற்பட்டவள்
தன் தங்கைக்குத் தாயாய் அன்பு சொரிபவள்

புக்ககம் தன்னில் புத்துணர்ச்சி கொடுப்பவள்
அக்கம் பக்கத்தாரின் அன்பைச் சம்பாதித்தவள்
மக்களின் மக்களில் மழையன்பு பொழிபவள்
மருமக்கள் மகிழ்வில் மனதை மறப்பவள்

கருத்தில் தினமும் எம்மைச் சுமப்பவள்
எம் நண்பர் மத்தியில் இங்கிதம் தெரிந்தவள்
எனக்கு எப்போதும் நண்பியாய்த் திகழ்பவள்
சுமந்து, சுமந்தும் இன்றும் சலிக்காதவள்

ஆனதே எங்களன்னைக்கு அகவை ஐபதினைந்து
ஆரோக்கியமும் அகமகிழ்வும் சேரவே வாழ
ஆனைமுகனே ஆறுமுகன் அம்பிகை
அம்பலவனுடன் அம்மாவை ஆசீர்வதியுமையா!

## நம்பிக்கை

தளர்ந்து நீமனமே தயக்கம் கொள்ளாதே!

உணர்ந்து நீயும் உறக்கம் கொள்ளாதே!

துணிந்து தான் நீயே இறங்கு களத்தில்!

பணிந்திடுமே தோல்வி, கனியாகும் வெற்றி!

நினைப்பது எல்லாம் தானேயாகுமே எனநீயும்

கனவிலே தினமும் காலம் கழிப்பதனால்

தினமும் நீயடைவாய் ஏமாற்றம் மட்டிலுமே

எனவே நீகனமாய் ஈடுபடுவாய் சிந்தனையினிலே!

தூயதாய் சிந்தி! துணிவுடனே முடிவெடு!

ஆழமாய் ஆசைகொள்! அனுதினம் அதைநினை!

நேசமாய் திட்டமிடு! நேர்த்தியாய் உழைத்திடு!

தேடிவரும் நன்மை! திளைக்கலாம் மகிழ்வினில்!

உன்னுடைய எதிர்காலம் உள்ளது உன்கையிலே!

என்பதை எப்போதும் ஏற்றிடு அகத்துள்ளே!

உன்னைநீ நம்பாவிடின் உலகமெப்படியுனை நம்பும்?

உன்மேல் வைநம்பிக்கை! உன்வாழ்வில் பொருளிருக்கும்!

# யார் பொறுப்பு?

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே..என்ற பாட்டை நாம் பலரும் கேட்டிருக்கிறோம். ஆனால் அது எந்த அளவுக்கு இன்றைய சூழலுக்கு அமைவாய் இருக்கிறது என்பது வினாவாகத்தான் இருக்கிறது.

முன்னைய காலங்களில் தந்தையானவன் வேலைக்குப் போய் பணம் ஈட்டி வருவதும் அந்த வருவாய்க்கேற்ற விதமாக சமைத்தும், மீதியைச் சிக்கனமாகச் செலவு செய்தும் தாயாகப்பட்டவள் குடும்பம் என்ற தேரைச் செலுத்தி வந்தாள். ஆனால் இப்போது காலம் வெகுவாக மாறிப் போய் இருக்கிறது. ஆணும் பெண்ணும் உழைத்தால் தான் குடும்பம் என்ற 'கார்' ஒழுங்காக ஓட்டமுடியும் என்ற நிலைக்கு நம்மவர் ஆளாகி இருக்கிறோம்.

வருவாய் கூடும் போது தேவைகளும் பெருகுகிறது. அதனால் வாழ்வின் அவசரமும் அதிகரிக்கிறது. அதனால் மன அழுத்தமும் அதனால் ஏற்படும் உடல் வாதைகளும் கூடிச்செல்வது தவிர்க்க முடியாததாய் இருகின்றது. இது ஒரு புறம் இருக்க இதனால் சொந்தக் குழந்தைகளின் வளர்ப்பு முறைகளும் வேறு பட்டுச் சீரழிவது வேதனையாய் இருக்கிறது.

வாழ்வில் நம்பிக்கை வளர வேண்டுமென்றால் பணவருவாயும் இருக்க வேண்டும் என்பது உண்மதான். ஆனால் அதைவிட நிதானம் தேவையாக இருக்கிறது. பணம் தேடல் என்பது எதற்கென்ற தெளிவு எம்மவரிடம் இருக்க வேண்டும். அதை நம்மில் பலர் சிந்திப்பதற்கே தயாராக இல்லை. காரணம் அவசரம் தந்த அவலம் தான். ஆனால் அதனை இனியும் நாம் சிந்தித்துப் பார்க்காவிட்டால் அதன் பலன்கள் விபரீதமாகவே இருக்கப் போகிறது.

என்னவென்றால் நாம் தினமும் எழுந்துகொள்கிறோம். எம் கடன்களை அவசரமாக முடித்து அவசரமாகவே உண்டு, அடித்துப்பிடித்து ஆயத்தமாகி அவசரமாகவே பிள்ளைகளையும் ஆயத்தம் செய்து அலுவலகம் புறப்படுகிறோம். அலுவலகம் என்று குறிப்பிடுவது வேலைக்கெனப் புறப்படும் தலம் தான். அலுவலகத்தின் தரம் பற்றி நாம் பேசவில்லை இப்போது.

ஆனால் நாள்முடிவில் சிந்தித்தால் எமக்குக் கிடைத்த பலன், அல்லது அன்று நாம் சாதித்தது என்னவென்று சிந்தித்தால் வங்கியின் பண இருப்பாக இருக்கலாம். அதே நேரம் எமது உடல் உழைப்பு, இளமை யாவற்றையும் இழந்து இருக்கிறோம். அதற்காக எதையும் செய்யாமல் இருக்க வேண்டும் என்று சொல்ல நான் தயாரில்லை. சும்மா வெறுமனே உட்கார்ந்து பொழுதைக் கழிப்பது மிகப் பாரதூரமானதே.

உழைப்பது யாருக்காக? குடும்பத்திற்காக, குழந்தைகளுக்காக என்று கூறிக்கொள்ளும் நாம் அந்தக் குடும்ப நலனைத்தூக்கியெறிந்துவிட்டு வாழ்வின் தாற்பரியம் தொலைந்தவர்களாக இருப்பது துன்பம் தானே!

பணமே வாழ்வாகத் தன் குழந்தைகளின் நலனைச் சிந்திக்க மறந்தவர்களாக நாம் ஓடிக் கொண்டிருப்பதால் பிள்ளைகளின் மீதான கவனம், பிள்ளைகள் பெற்றோர்மீது காட்டும் பரிவின், பாசத்தின் பகிர்வும் கூடக் குறையும், இழக்கும் சூழலும் அமைந்து விடுவது தவிர்க்க முடியாததாக அமைந்து விடும். அதுவும் புலம்பெயர் நாடுகளில் பக்கத்து வீட்டுக்காரன் இறந்தால்கூட ஏனென்று கேட்காத சூழலில் வாழும் நாம் பிள்ளைகளின் மீது தனித்த கவனம் செலுத்தாவிடில் அவர்கள் எதிர்காலம் சூனியமாக அமைந்து விடும்.

இப்போதெல்லாம் சிறியவர்கள், பெரியவர்கள் பலரும் கணனியுடனே வாழ்வை கழிக்கிறார்கள். இப்பூவுகவாழ்வில் இயந்திரத்தோடு ஒரு மாயைவாழ்வில் வாழ்வது மேன்மேலும் இடைவெளியை மக்களிடையே ஏற்படுத்துவதால் காலப்போக்கில் ஒருவரை ஒருவர் தமக்கு இரையாக்கினாலும் ஆச்சரியப் படுத்துவதற்கில்லை.

பெற்றோர் பிள்ளைகளுடன் பழகாமல் இருந்தால் பிள்ளைகளை வழிப்படுத்துவது முடியாத காரியமாகிவிடும். விளையாட்டுப் பொருட்கள் வாங்கிக் கொடுப்பதோடோ, விலையுயர்ந்த உடைகளை வாங்கிக் கொடுப்பதோடோ அன்பைக் காட்டுவதாக நினைக்கும் பெற்றோர் மிகமுக்கியமாகப் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டியே ஆகவேண்டும். அது மட்டுமல்ல பிள்ளைகளை மற்றவர்களோடு பழகும் தன்மையுடையவர்களாக, அதாவது மற்றவர்களின் திறமையை இரசிப்பவர்களாக மற்றவர்களை மெச்சுபவர்களாக, பெரியவர்களைக் கனம் பண்ணுபவர்களாக சமுதாயத்தோடு சேர்ந்து வாழ்பவர்களாக வளர்க்க வேணடியது பெற்றோரின் பொறுப்பன்றி வேறென்ன?





## மறந்தது எப்படி?

நிலாவே நீ

கடந்து வந்த பாதையை மறந்தது எப்படி? ~மறந்தால்

சிறந்து தான் நீயும் வாழ்வதெப்படி?

பறந்து நீதான் நாடுகடந்துவிட்டாலும்

சிறந்து நீவாழ்ந்த காலங்களை மறந்ததெப்படி?

பொழுது போக்க நீபடைத்த ஆக்கங்கள்

விழுதுவிடக் காரணமாய் ஆனவசந்த காலங்கள் ~நாட்

பொழுதில் பத்திரிகை வானொலியென படைப்புகள்

எழுதக்காரணமாய் ஆன அரியவாய்ப்புகள்!

இங்கிலாந்து நாட்டில் நீயும் எடுத்துவைத்த காலடிகள்!
இங்கிதமாய் ஒலித்த சன்றைஸ் வானொலியினோசைகள்!
முண்டியடித்து நீயுமுழறிவைத்த கவிதைப் பாணிகள்!
முனைப்பாய் உனைத்தூண்டிய நடாமோகன் அணிகள்!

ஆண்டுகள் நகர்ந்தன.. அணங்கு நீ, இணையத்தில்
பூண்டபாக்கள்! பூரிப்பைத்தந்த புண்ணிய தருணங்கள்!
நீண்டகால வோட்டத்தில் நிலாவே நீயும் நீயாய்
லண்டன் தமிழ் கரம் பற்றினாய், மறந்ததெப்படி?

காரிகை நீயும் கவிதையுடன் நிறுத்தவில்லை
பாரிய படைப்பெனநின் சுயசரிதம் 'எழுதஎழுத' பிரதிவாரம்
கூரிய அம்பெனவே லண்டன் தமிழ் வானொலியில் இயம்பிநின்றாய்
நூலெனவும் கோர்த்திட காரணமானதை மறந்ததெப்படி?

எழுதுவதே ஆக்கம் தானா ஏங்கியதொருகாலம்
எப்போது இதுவெளியாகுமெனக் கலங்கியதொருகாலம்
ஏறிவந்த ஏணிதனை தள்ளிவிட ஆகுமோவுன்னால்
எடிபெண்ணே நீயும் இவையெல்லாம் மறந்ததெப்படி?


Cinderella

## வசந்தம் வருமா (நாட்டிய நாடகம்)

**துவக்கப் பாடல்**

இந்த இல்லம்! எழில் கொஞ்சும் இல்லம்! ~எனினும்

சின்டிரெல்லா எனும் எளிய நங்கை ~ மனம்

நொந்து தவிக்கும் கொடிய இல்லம்!

அன்னை மடிய, தந்தை மணந்த தாரத்தாலே

சுந்தரி சின்டிரெல்லா, சுகம் இழந்து வாழும்

விந்தை நிறை வீடிது பாரீர்! வீடிது பாரீர்!

**சின்டிரெல்லா**

பட்டாம் பூச்சியாய்ப் பறக்க எனக்கும் ஆசை!

பாவியானேன்! நான் ஆனதாலே படும் பாடிதல்லோ!

படும் பாடிதல்லோ!

பாதியிலே தாயை இழந்தேன், காலப்போக்கில்

வீதியில் எறியப் பட்டேன் தந்தை இறந்ததாலே!

படும் பாடிதல்லோ!

பத்துப் பாத்திரம் தேய்க்கணுமே! ~ நான்

பகலிரவாய்ப் பாடு படணுமே! ~ தினமும்

சுற்றுப் பிரகாரம் துடைக்கணுமே!

துவண்டிடாமல் நாளும் உழைக்கணுமே!

மாற்றான் தாய் மட்டுமல்ல ~ உடன்

பிறவாச் சோதரிகாள்

கூற்றால் நானும் துவண்டேனே!

கூட யாரும் எனக்கில்லையே!

**மாற்றான்றாய்**

யாரங்கே! வா இங்கே சின்டிரெல்லா!

பாரங்கே! பல தூசு! பார்த்துத் துடைக்க மாட்டாயோ!

**சகோதரி1**

இங்கே வா! சின்டிரெல்லா! ஒழுங்காக

எடுத்துப் போடு அழுக்கதனை, ஒரு பக்கம்

பங்கம் ஏதும் விளைவிக்காது – இத்னை

பாங்காய் மினுக்கிப் போடு பக்குவமாய்.

**சகோதரி 2**

முளித்து நீயும் மிரளாதே!

பளிங்கு போல என் சப்பாத்தை

பளபள ன்னு துலக்கடி ஒழுங்காக!

துலக்கம் குறைந்தால் தொலத்திடுவேன்!

**சின்டிரெல்லா**

செய்யும் பணியைத் திறம்படவே

செய்தே முடிப்பேன் சிற்றன்னையே!

கவலை வேண்டாம் சோதரிகாள்

கவினித்தே முடிப்பேன் பணிகள் தன்னை!

கலக்கம் வேண்டாம் சோதரிகாள்

துலக்கம் துலங்கும் துவளாதீர்!

**அரசவைச் சேவகன்**

அரசவைச் சேவகன் நான்!

அரசவைச் சேவகன் நான்!

அறிவிக்க வந்தேன் சேதியொன்றை!

அரசர் விடுத்த அறிவித்தலொன்றை!

பெண்மணிகளே! பெரு நற்சேதியொன்று!

கண்மணிகாள் உங்கள் அணி சேர ~ அரசர்

கொள்ளவுள்ளார் பெரு நாட்டியமே!

கொண்டிடுங்கள் ஆயத்தம் கோலகலமாகவே!

**சகோதரி 1**

வாடி நாங்கள் அலங்கரிப்போம்

கூடிநிற்கும் அரசர் மாளிகையில்

நாடி நிற்போம் நல்ல வாய்ப்பு!

தேடி நிற்போம் திறம் மிகு வாழ்வே!

**சகோதரி 2**

இங்கே பார்! இந்தப் பட்டாடை

உனக்கு நல்லெடுப்பாய் இருக்கும்!

அங்கே உள்ள அழகு செருப்பதனை

எனக்கு அணியத் தந்து விடேன்!

**தாய்**

போதும் மக்காள், உங்கள் அலங்கரிப்பு

நாமும் அங்கே விரைவில் ஏகின்

மோதும் இனிய சந்தர்ப்பம்

நாளும் நடக்கும் நலமாகுமே கேளுங்காள்!

**சின்டிரெல்லா**

நானும் என் அலுவல்கள்

யாவும் முடித்து விட்டேன்!

ஆனமட்டும் உடையணிந்து

மாளிகைக்கு வரலாமோ!

ஆனமட்டும் உடையணிந்து – நானும்

மாளிகைக்கு வரலாமோ!

**மூவரும் (சிரித்து)**

வேறு வேலை ஏதும் இல்லையோ

வேண்டாம் உந்தன் தரிசனம் அரசர்க்கு

ஊறுநீயும் விளைவித்து விருந்ததனை

உருச்சிதைக்க வேண்டாமே!

உருச்சிதைக்க வேண்டாமே!

நாங்கள் போவோம் வாருங்கள்

நல்ல நாளை அனுபவிப்போமே! ~ இங்கு

தேங்கும் மணித்துளிகளில்

மெல்லப் போகும் வாய்ப்பு எமை விட்டே

(மூவரும் சென்று விடல்)

**சின்டிரெல்லா (சோகத்துடன்)**

நான் என்ன பாவம் செய்தேன்?

நான் என்ன துரோகம் செய்தேன்?

ஏன் எனக்கு இக்கதி?

எப்போது எனக்கு கிடைக்கும் நிம்மதி?

வாழத்தான் வேண்டுமா?

வாழ்வே சூனியமானதே!

(தேவதை வருதல்)

**தேவதை**

அழகே உருவான சின்டிரெல்லா

அழுவது தேவையென்ன சின்டிரெல்லா?

கொணர்ந்தேன் உன்னுடை சின்டிரெல்லா!

உனக்கேன் இன்னும் துக்கம் சின்டிரெல்லா?

உணர்ந்தேன் உன்கவலை சின்டிரெல்லா

விருக்கென தயாராகு சின்டிரெல்லா!

**சின்டிரெல்லா**

தயாரானாயினும் போயிடுமே காலம்

ஆயத்தங்கள் யாவுமே வீணாகுமே!

(கதவு தட்டப் படும் சத்தம்)

யாரிது கதவு தட்டுவது?

ஏனிது இப்படி நடக்குது?

(கதவு திறத்தல்)

**சுண்டெலி 1**

நான் தானுன் நண்பன் சுண்டெலி

ஏன் தான் வீண் கலக்கம் தயாராகு சின்டிரெல்லா

**சுண்டெலி 2**

நானும் உன் தோழனே சின்டிரெல்லா

ஏனிந்தக் கேள்விகள் உன்சிந்தையில்?

சீக்கிரம் நீயும் ஆயிடு தயார், ஏறு நீ வண்டியில்..

பூசனிக்காய் தான் வண்டியானது!

கூசாமல் ஏறியமர்...ஏகுவோம் பலே நடனம்!!

கூசாமல் ஏறியமர்...ஏகுவோம் பலே நடனம்!!

**சின்டிரெல்லா**

நம்பவே முடியவில்லை,

நானும் பலே போவேனென

இம்மியும் நினைக்கவில்லை

தேனெனச் சொரியும் உங்களன்பால்

நானும் பலே போவேனென

இம்மியும் நினைக்கவில்லை!

அங்கே பாரழகு அரண்மனை!

இங்கிதமாய் நிறுத்து வாயில் தன்னில்

இம்மியும் நினைக்காத தருணமிதன்றோ!

**மாளிகை அமைப்பு**

ஒளிரும் விளக்குகளும் ஒலிக்கும் மெல்லிசையும்

தளிரென மங்கைகளுமென துலங்கும் மாளிகையில்

மெல்ல மெல்ல வைத்தாள் தன்னடிதன்னை சின்டிரெல்லா!

நிமிர்ந்த நெஞ்சும், வீரிய தோள்களும் சேர மன்னன்மகன்

துணிந்தே மெல்லியலாள் சின்டிரெல்லா கரம்பற்றி இடைசுற்றி

வளைத்தே அருகிழுக்க அசந்து போனாள் சின்டிரெல்லா!

ஆடவன் தன்னிலை மறந்தே ஆடினான் பலே

ஆரணங்கு சின்டிரெல்லா ஆனந்தத்தின் எல்லையிலே!

**மாற்றான்றாய், சோதரிகாள்**

யாரிந்தக் காரிகை அரசன்மைந்தன் மனங்கவர்ந்தாள்?

பார் வந்த பாக்யதை? பறித்துக் கொண்டாள் தன்பக்கம்!

நாம்பட்ட பாடெல்லாம் வீணாச்சே நமக்கென்ன இனிவேலை

நங்கை யாரென்றும் அடையாளம் தெரியோமே!

**(பன்னிரண்டு மணி ஒலிக்கிறது)**

**சின்டிரெல்லா**

ஆச்சே மணி பன்னிரண்டு

ஆகவே கிளம்புறேன்!

**இளவரசன்**

ஓடாதே! பெண்ணே! நில் நில்!

உன்பெயரும் யானறியேன்! நில்!

ஓடாதே! பெண்ணே! நில் நில்!

உன்விலாசமும் நானறியேன்!

**சின்டிரெல்லா**

ஓடியாகணுமே! இல்லையேல் என்வேடம் கலைஞ்சிடுமே!

ஓடியாகணுமே! இல்லையேல் என்வேடம் கலைஞ்சிடுமே!

ஐயகோ! ஓடணும் பன்னிரண்டு அடிப்பது ஓய்வதற்குள்

இல்லையேல் என் வேடம் கலைஞ்சிடுமே! ஓடணுமே!

(செருப்பு விழுகிறது)

எதற்கும் நேரமில்லை எடுப்போம் ஒரே ஓட்டம்
எவரும் பார்த்து விட்டால் போயிடுமே என்மானம்!

(வண்டியோட்டுனரைப் பார்த்து)

**சின்டிரெல்லா**

எடுப்போம் ஓட்டம், எடுப்போம் ஓட்டம்!
ஓட்டுங்கள் தேரை! எம்காலம் முடிவதற்குள்!
துடிப்பாய் துரத்திவரும் வீரர்காள் பிடிப்பதற்குள்
ஓட்டுங்கள் தேரை! எடுப்போமே ஓட்டம்!

(குழு)

ஓடித்தான் சின்டிரெல்லா, போகையில் தேரும் தான் சிதைந்து
ஆனது பூசனிக்காயென.. ஆடித்தான் போனாளே ஆரணங்குமே!
நாடித்தான் வந்த குதிரைகளும் வழமைக் கோலஎலிகளாயின
பாகனும் பரியாயினான்! பாவையின் உடைகளும் பொலிவிழந்தன!

என்னதான் ஆயினும் எழில்நங்கை மனதில்
இனம் புரியா உணர்வின் ஆதிக்கம்
எஞ்சியதோ எழிலவள் ஒரு பாதணி
மனமெல்லாம் மன்னனவன் எண்ணமே!

**(அரசவையில்)**

**அரசன்**

என்னவை வந்துபோன எழிலவள் யாரோ?

என்னவள் அவள் தான்! இது என் முடிவு!!

அணங்கவள் காலணியிலொன்று உள்ளதால்

எப்படியும் அறிந்து சொல் யாரென அமைச்சரே!

**(அமைச்சர்)**

ஆகட்டும் அரசே! அறிவிப்பேன் இன்றே!

திக்கெட்டும் பாதணி கொண்டே ஏகுவேன்!

யார்காலில் பொருந்தும் இக்காலணியோ

அவர்தானிந்த அரசவையின் ராணியென்பேன்!

**(அரசன்)**

அப்படியே ஆகட்டும்! அதைவிட ஏதுஆனந்தம்!

அப்படியே ஆகிவிட்டால் அமைச்சரே தம்மை

அப்படியே ஆக்கிவிடுவேன் தலைமை அமைச்சராகவே

எப்படியும் தேடித்தந்திடுவீர் என் தேவதையை!

**மறுநாள் காலை**

**மாற்றான்றாய்**

இங்கே வா சின்டிரெல்லா ஏன் இந்தத்தரையெல்லாம் அழுக்கு?

அங்குமிங்கும் பலபுள்ளி அழுத்தித்தான் தேய்த்துவிடு!

சென்றே பார் சமையலறை! துலக்கு தேனீர் பாத்திரங்கள்

இன்றேல், இல்லை உனக்கு உணவு! மறந்திடாதே!

**குழு**

வழமை போல் சின்டிரெல்லா வகைவகையாய்ப் பாத்திரங்கள்

பளபளக்கத் தேய்த்தாள், வஞ்சியிவள் மூச்சிரைக்க

வழுவழுக்கத் தரை தேய்த்தே மாய்ந்தாள்!

வாசல்மணியழைத்தே வந்தவர்கள் யாதென அறியாள்!

**மாற்றான்றாய்**

எழும்புங்கள் பிள்ளைகாள்! எழும்புங்கள் பிள்ளைகாள்!

கனிந்துள்ளது நல்லவாய்ப்பு! கவலை வேண்டாமே

எழும்புங்கள் பிள்ளைகாள்! எழும்புங்கள் பிள்ளைகாள்!

கனிந்துள்ளது நல்லவாய்ப்பு! கவலை வேண்டாமே

**மகள்கள் (விழித்து)**

என்னம்மா சொன்னீர்கள்? என்னம்மா சொன்னீர்கள்?

இயம்புங்கள் விளக்கமாய்! என்னதான் அச்சேதி?

**தாய்**

அரசவை ஊழியன் கொணர்ந்துள்ளான் ஒரு பாதணி

அதுவுங்கள் காலுக்குப் பொருந்தினால் ஆகலாம் இராணியாய்!

அரசனின் மனங்கவர் மங்கையின் உரித்ததுவாமே பெண்களே!

எழுங்கள் சீக்கிரம்! இருக்கலாம் சந்தர்ப்பம் உங்களுக்குமே!

**அரசவை ஊழியன் 1**

எடுத்துக்கொடு பாதணி, அணிந்து தான் பார்க்கட்டும் முதலில்

அடுத்து நாம் பார்க்கலாம் அரசர் பதில் எதுவென

**அரசவை ஊழியன் 2**

நீட்டுங்கள் உங்கள் காலை! பொருத்தித் தான் பார்ப்போமே!

காட்டுங்கள் உங்கள் பாதம், காலணி பொருந்துமா என்று!

மாட்டிட ஆகவில்லையே உங்கள் சோதரிக்குப் பொருந்துமோவென

மாட்டித்தான் பார்ப்போமே நகருங்கள்! நகருங்கள்!

அதுவும் தான் முடியவில்லை. வேறுயாரும் உண்டோ பொருத்தமாய்!

அதோ ஓர் மங்கை! அவளுக்குப் பொருத்திப் பார்ப்போமா?

அரசவைக்கு நீங்கள் வந்திருந்தீர்களா? அழகு பலேதனுக்கு!

இதோ இந்தப் பாதணி அணிந்து தான் காண்பியுங்களேன்!

**தாய்**

ஏன் இந்தப் பித்லாட்டம்! இவள் அங்கு வரவில்லை

என்ன சொல்கிறாய் சின்டிரெல்லா? எடுத்தியம்பு!!

**சின்டிரெல்லா**

எதற்கும் நானிதனை அணிந்து பார்க்கிறேனே

அதற்கு எனக்கு உண்டுதானே உரிமை?

**ஊழியன் 1**

உண்டு உண்டு உரிமை! உளமாரச் சொல்கிறேன்

வந்து நீங்கள் அணிந்து தான் பாருங்களேன்!

**(ஊழியன் தடுக்கி வீழல்)**

ஐயகோ! நான் என் செய்வேன்! கண்ணாடி யிலான

அழகுப் பாதணி சுக்கு நூறானதே நானென் செய்வேன்?

**சின்டிரெல்லா**

**(தன் பொக்கட்டிலிருந்து)**

இது போன்றா பாருங்கள்? அதன் அடுத்த சோடி

என்னிடம் உண்டு ஏனெனில் அதுவும் எனதே!

**ஊழியன் 1**

ஆமாம் அதுவே தான் அதன் சாயல், அமைதி கொண்டேன்

கோணாது நீங்கள் அணிந்து உறுதிப்படுத்துங்கள் அம்மணியே

சிண்டிரெல்லா

இதோ பொறுங்கள் இலேசாய் அணிந்து காட்டுகிறேன்

இதோ பாருங்கள்! என்காலுக்கே இது பொருத்தம் சரிதானே?

இதோ பாருங்கள்! என்காலுக்கே இது பொருத்தம் சரிதானே?

இந்தப் பாதணிக்கு நான் சொந்தக்காரி யாயின்

நானாவேனா பட்டத்து இராணியாக?

நானாவேனா பட்டத்து இராணியாக?

(மகிழ்வில் துள்ளுகிறாள்)

குழு

பட்டத்துக் குதிரைகள் பவனிவர பணிப்பெண்கள் புடை சூழ

பட்டத்து ராணியாய் சிண்டிரெல்லா பளிங்கு மாளிகையேகினாள்

சுற்றத்து மகாராசாராணிகள் யாபேரும் வருகை தர வெகுசிறப்பாய்

கொற்றத்து முன்றலில் கோலாகலமாய் நடந்தது திருமணமே!

வானத்து சந்திரனும் பலகோடி நட்சத்திரமும் களிப்புற்றே

கோலத்தில் இளமங்கை மணாளனை குதூகலமாக

வாழ்த்திடவே, சிங்காரச் சிட்டுக்கள் கரங்கோர்த்தே

சூழ்த்தே சேவகர்கள் சாமரங்கள் வீசிவர அவனியில் வலம்வந்தனரே!

## யார் இவள்?

ஏ பெண்ணே!

காலையென்ன மாலையென்ன கவலைபல தீர்ப்பவளே !
சேலையென்ன வேட்டியென்ன, சேதிபல பகிர்பவளே!
வேலையென்ன வெட்டியென்ன? வேளைகளைக் கழிப்பவளே!
சாலையென்ன சந்தியென்ன? சோலையெனத் திகழ்பவளே!

கோழையென்ன, குமரியென்ன குழப்பம் தினம்வளர்ப்பவளே!
மூலையென்ன முடுக்கென்ன! முழுமூச்சாய் உழைப்பவளே!
மேலைநாடு கீழைநாடு வேறுபாடு யாதுமின்றி
பாலைவனமீறாக பரவலாய் பணிகள் புரிபவளே!

துருவங்களை இணைப்பவளே! தூரங்களை உடைப்பவளே!
பருவங்களை மட்டுமல்ல பண்பாட்டையும் சிதைப்பதென்ன!
உருவங்களையும் தான்மறந்து உன்னத உறவுகளையும்
அருவங்களான போதும் அசலெனவே ஆட்டிவைக்கலாமோ!

ஆக்கவும் வல்லாளே! அழிக்கவும் வல்லாளே!
அறிந்தவர் அறியாதார் தெரிந்தவர் தெரியாதோர்
அறியாமை நீக்குபவளே! ஆதலால் ஆனாயோநீசக்தி!
அகிலத்தையே அலங்கரிக்கும் சாதனைநீ! சரித்திரம்நீ!

இக்கவிதைக்கான பதில் இறுதிப் பக்கத்தில்

## வதையும் நெஞ்சம்

பேசுவது தமிழ் என்பதால் பாரிலிருந்து ஒன்றுசேர
பெருமையுடன் கூடிவிட்டோம் செம்மொழி மாநாடு!
பேசியது தமிழ் என்பதால் அன்றுமுதல் இன்றுவரை
தேசிய இனங்களுள் ஒன்றாயிருந்தும் ஈழத்துத்தமிழன்
தரசியிலும் கேவலமாய் வீசி எறியப்பட்டான்! — ஆனால்
ஆசுவாசமாய் அமர்ந்திருந்து ஆராய்கிறோம் செம்மொழிபற்றி
ஆமாம்! எரிகிற வீட்டிலே ஆடம்பரத் திருமணம்! —எமக்காய்
அழவே நேரமில்லை எமக்கு! இதுதான் எம் மனிதநேயம்!

பெற்ற மகவை தாயின்முன் தாரில் கொதிக்கவைத்தான் சிங்களவன்!
பெண்மங்கை முலையறுத்து அவள் முடியில் தொங்க விட்டான் சிங்களவன்.
பற்றவைத்தே பலர்குடியை பாதாளத்தில் தள்ளிவைத்தான் சிங்களவன்
கண்டமறுத்து தமிழனை இறைச்சிக்கடையதனில் விற்றானே சிங்களவன்.
தரப்படுத்தல் எனும் பெயரால் தமிழன் தரத்தை மட்டுப்படுத்தியவன்
தமிழனவன் தரைதனை தனதாக்க குடியேற்றினான் சிங்களவன்
ஆண்டுநின்ற நம்மினத்தை கூண்டோடொழிக்க தீட்டினானே சிங்களவன் திட்டங்களாய்.
இத்தனையும் செய்தவன் இனத்துடன் எப்படி நாம் சேர்ந்து வாழ்வது?

முள்ளிவாய்க்காலில் எம்மினத்தைமுடக்கியே கொள்ளிக்குண்டுகளால் பொசுக்கியது சிங்கள அரசு.
கொள்ளி கூடப்போடமுடியாத அள்ளி அள்ளி சதைப் பிண்டங்களாய் ஆக்கியது சிங்களவரசு.

பள்ளிசெல்லும் பாலகரையும் பச்சையளங் குமரிகளையும் கூறுபோட்டது சிங்களவரசு! பிடரியில்

புள்ளிபோட்டே இளைஞர்களை நிர்வாணமாக்கி சுட்டுத் தள்ளியது சிங்கள அரசு.

தள்ளி நின்றே மேல் நாட்டு, அயல்நாட்டு அரசுகளும் வேடிக்கைபார்த்தது மட்டுமல்ல

கள்ளவழி கனரக ஆயுதங்கள், தாங்கிகள் கொள்ளை கொள்ளையாய் வழங்கி,

தெள்ளத் தெளிவாய் விதித்தது இராணுவ வலை. அள்ளிக் குடித்தது எங்கள் தமிழன் குருதி,

அழுதே வாடுது எங்கள் கொடி. அதுவே தானோ தமிழன் விதி! அதுவே தானோ தமிழன் விதி!

அன்னிய நாட்டில் உள்ளோம் நாம் ஆனாலும் எம் மனம் நிறைந்த 'விடுதலைத் தீ '

ஆகும் அரசாங்கம் 'நாடு கடந்த தமிழீழம்' அனைவரும் மீட்டெடுப்போம் வா தமிழா!






**முருகனே! முருகதாஸா!**

முருகனே! முருகதாஸா! உருகுதையா மனமே!

கருகினாயே தீயினிலே! கலங்கினோமே நாமும்!

அருகினிலே, உன்னருகினிலே வரமுடியுமா அடலே!

தருகிறதே துக்கம் தனயனே நின் மறைவே!

ஐ நா வினின் முன்னேகி உன்துயர் தெரிவிகக

உன்னையே எரித்தவனே! உன்னத மைந்தனே!

தன்னலம் மறந்தவனே! தனிநிகர் மைந்தனே!

தமிழ்த்தாய் தன்னின் தவப்புதல்வனே! தளிரே!

வாழவேண்டிய வயதில் வானுலகம் புகுந்தவனே!

வாழவேண்டும் நாமென வாய்க்கரிசி வாங்கினாயே!

ஆழமாகநம் மனதில் விடுதலைத் தீவளர்க்க


மூளவைத்தாய் தீதனையே! மூழ்கிறோம் துயரினிலே!

படிப்பிலும் மிளிர்ந்தவனே! பட்டமும் பெற்றாயே! ~ இனத்

துடிப்பாலே இன்னுயிர் தனையே ஈந்தவனே! சொகுசுவாழ்வை

முடித்திங் கிருந்து போகையிலும் முடிவை முன்வைத்தாயடா!

துடிப்படங்கிப் போகும் வரைநாமுன் எண்ணப்படி போராடுவோமடா!



# அடி பணிகின்றோம்

மானமொன்றே பெரிதென நினைத்து ~ தமையே
தானம் கொடுக்க விழைந்த வீரர்களே!
ஆனமட்டும் போராடி, போர் வேள்வியில்
ஆகுதியானீர்களே! அடி பணிகின்றோம்!

வாழ்வது ஒருமுறை! வானுயரப் புகழுடன்
வாழ்வது பயனுள்ளதாய் ஆகிடல் அரும்பணியென
சூளது அகவேள்வியாய்க் கொண்டீரோ! ~ தலைவன்
தாளது பணிந்து புகுந்தீரோ போர்க்களம்!

காலங்கள் கடந்தாலும் கலங்கரைவிளக்காய்
தேசங்கள் பேசிடும்! நின் தியாகங்கள் யாவுமே
கீலங்களாய் இதயப்பாலத்தில் உள்ளதே!
தேசம் எமதாகுமே! தேசம் எமதாகுமே!

தாகம் தமிழீழமென ஆசைகள் துறந்தே
தியாகங்கள் பல செய்தீர்களே அரும்புதல்வர்களே!
தாயகம் எமதாகும்! தமிழீழம் உருவாகும்!
போகாது உங்கள் கனவுகள் வீணாக! துயிலுங்கள் தோழர்களே!



## நகையை எடைபோடுவோமா?

இப்போதெல்லாம் எம் காதுகளில் அடிக்கடி விழும் செய்தி என்னவென்றால் களவு போட்டுதாம். ஆம் வீட்டிலுள்ளவர் வீடுவிட்டுப் புறப்பட்டுக் குறுகிய கால எல்லைக்குள் வீட்டில் ஆட்கள் நடமாட்டம் இல்லை என்பதைத் தெரிந்து வைத்து, வீட்டினுள்ளே புகுந்து நகைகளை வாரிச்சுருட்டி விடுகிறது திருட்டுக்கும்பல்.

மற்றவர்கள் பாடுபட்டுச் சேர்க்கும் பொருட்கள் மீது பேராசைப்பட்டு நயவஞ்சகமாகத் திருடும் சுயநலக் கும்பல்கள்! இதை எப்படி நாம் தவிர்க்கலாம்? நிச்சயமாக நாம் இதுபற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எம் போன்ற வளர்முக நாடுகளில் முன்பெல்லாம் நகைகள் வாங்குவதென்றால் அது பாரிய முயற்சிகளில் தான் இடம்பெறும். ஆனால் இங்கோ ஐரோப்பா நாடுகளில் நகைகளை நினைத்த மாத்திரத்தில் பாரிய பணச்செலவில் அதிக நிறையுள்ள நகைகளாக செய்து கொள்கிறார்கள் நம்மவர்கள்.

தொலைக்காட்சி விளம்பரங்களில் காட்டப்படும் வடிவத்தால் பெரிய நகைகளைக் கூடத் தாமும் தயாரிக்க முற்படும் எம் தமிழ்க்குடும்பங்கள். அதற்கான பணத்தைச் சேர்க்க கணவன் மனைவி எல்லோரும் சேர்ந்து படும் பாடும், நேரஞ் செலவழித்தலும் கணிசமானவை. அதன் மூலம் பெறப்படும் பணத்தில் தயாரிக்கும் நகைகள் ஆபத்துக்கான வழி சமைத்தலாகவே இருக்கிறது.

இது ஒரு புறமிருக்க தாங்களணியும் உடைக்கேற்ற வண்ணங்களில் தங்கம் அல்லாத மிக எளிய விலையில் நகைகள் அணிவது மிகச் சாதாரணமாகி விட்டது. இது உண்மையில் வரவேற்கத் தக்கது தான். என்றாலும் அதற்கும் ஐரோப்பிய நாடுகளில் செலவு செய்யும் பணங்களும் இலங்கை ரூபாய்களில் சில ஆயிரங்களுக்கும் பெறுமதியாய் இருப்பதும் கவனிக்க வேண்டியதே!

முன்பெல்லாம் தமிழர்கள் தங்கள் பெண்பிள்ளைகளை மணம் முடித்துக் கொடுக்கும் போது, சீதனமாக நகைகளும், வீடும் காணியும் எனப் பலவகைச் சொத்தை அவர்களுக்கு கொடுப்பார்கள். அன்பளிப்பாக அவர்கள் கொடுப்பது ஒருபுறம் அதைத் தந்தால் தான் பெண்ணுக்கு வரன் கிடைக்கும் என்ற அவலம் ஒருபுறம். ஆனால் இந்தச் செயற்பாட்டின் உள்நோக்கம். தன் மகள் எதிர்பாராமல் வறுமை நிலைக்குள்ளாகி விட்டால் அந்த நகைகளை விற்றாவது தன் துன்பத்தை எதிர் கொள்ளட்டுமே என்று தான்.

இப்போது ஐரோப்பாவில் நாம் நகைக்கடைகளுக்குப் போனால் விற்கப்படும் நகைகள் மிகவும் நிறை கூடியவையாகவே இருக்கின்றன. உதாரணத்துக்கு ஒரு சோடி வளையல்களை வேண்ட முற்பட்டால், இரண்டு பவுண் எடையில் செய்தாலே அது ஓர் பெண்ணின் கரங்களில் தவழப் போதுமானதாக இருக்கும். அதன் பலமும் உறுதியாக இருககும். ஆனால் இப்போது நகைக்கடைகளில் அப்படியான நிறைகொண்ட நகைகளை வாங்கமுடியுமா என்றால் அது கொம்புத் தேனாகவே இருக்கிறது.

அத்தோடு நகை வியாபாரிகள் மக்களின் பணத்தை எப்படித் தம் வியாபார வசப்படுத்துவது என்பதை நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதைவிட இப்படியான பெறுமதியான நகைகளை யார் யார் அணிகிறார்கள் என்று கவனிக்கும் ஆந்தைக்கண் கொண்டவர்களாக அலையும் திருட்டுப் பேர்வழிகள்! உழைத்து வாழ்பவர்களை சுருட்டி வாழும் திருட்டுக் கூட்டம் எம் தமிழர்களுக்குள்ளும் வாழ்கிறார்கள் என்பது மிகவும் கசப்பான உண்மை.

இலங்கை நாட்டுத் தமிழ்ப்பெண்களுக்கு அணியப்படும் மாங்கல்யம் பல பவுண் எடையுள்ள தாலிக்கொடிகளாக கட்டப்படுவது வழக்கம், அல்லவா. இதன் தாற்பரியம் தெரியாத கறுப்பு வெள்ளை இன ஆடவர்கள் இதுவும் ஒரு பெண் நகை தான் எனத் தங்கள் கழுத்துகளில் அணிந்து திரிவது வேடிக்கையானதும் வேதனையானதுமே.

அந்தத் தாலிக்கொடிகள் முன்பெல்லாம் வசதி குறைந்த குடும்பங்களில் பன்னிரண்டு பவுண்கள் மட்டிலும் அதி கூடிய எடையாக பதினைந்து பவுண்களில் தாலிக்கொடி அணிவது வழக்கமாக இருந்தது. ஆனால் இங்கு வாழும்

தமிழ்க் குடும்பங்கள் மணப்பெண்ணின் வயதுக்கேற்ற எடையில் தாலிக்கொடி கட்டுவதும் அந்த எடையுள்ள நகையைத் தொடர்ந்து அணிய முடியாமல் குடும்பப்பெண் கழுத்துவலியில் துன்பப்படுவதுமாக வாழ்வு நகர்கிறது.

இந்த ஐரோப்பா நாடுகளில் இப்படிப் பணத்தைப் பவுணாக வார்த்து வைப்பது புத்திசாலித்தனம் தானா? இந்தப் பணத்தை ஏன் அசையாச் சொத்துக்களில் முதலிடக் கூடாது? நகைகள் அணிவது அழகுக்காக இருந்தால் ஆரோக்கியமான சிந்தனை. அதை விடுத்து மற்றவர்களுக்குப் போட்டியாகவோ பல நூறு பவுண்களை முடக்கும் விதமாக அமைப்பதோ ஆபத்தானதும் கூட. தமிழினம் சிந்திக்குமா?

## தழும்பல்கள்

### காட்சி1

**பாத்திரங்கள் : கமலம், வைஷ்ணவி, டிலன், டிலானா, அம்புலன்ஸ் ஆட்கள்**

**(அம்புலன்ஸ் ஆட்கள் அறைக்குள் இருந்து வெளிப்படல்... அவர்களை டிலானா பின் தொடர்தல்..)**

**கமலம்**

சித்திவினாயகரே நீதானப்பா துணை... ... ஆண்டவனே.. ஹ்ம்ம்ம் எனக்கு என்ன செய்யுறதெண்டே தெரியேல்லை. வயசு போன காலத்திலை எங்களுக்கு ஏன் இந்தச் சுமை? பாவம் அவர் ஓய்வொழிச்சல் இல்லாமல் பாடுபட்டதாலை தான் அவருக்கும் இந்தக் கதி!

**டிலானா:**

அப்பம்மா கவலைப் படாதேயுங்கோ!அப்பப்பா நல்லாஇருக்கிறார். அவருக்குக் கொஞ்சம் சநளவ தேவையாம்..

**கமலம்**

ஐயோ என்ர செல்லம் இஞ்சை வாங்கோ..அப்பம்மாவுக்கு ஆறுதல் சொல்ற அளவுக்கு நீங்கள் வளர்ந்துட்டீங்களோ...

இஞ்சை வா ராசா டிலன் .. ஏன் அங்கை நிக்கிறாய்.

**டிலானா**

அப்பம்மா ..நான் போய் அப்பப்பாவை ஒருக்கா என்ன செய்யிறார் எண்டு பாத்துட்டு வாறன். நீங்கள் கொஞ்சம் ஓய்வு எடுங்கோ. தம்பி நீங்கள் ஸ்கூலுக்குப் போகவேணுமெல்லோ. ரெடி ஆகுங்கோ. (பக்கத்து வீட்டு .. வைஷ்ணவி உள்ளே வரல்)

**வைஷ்ணவி**

டிலானா, டிலானா ..(கதவுதட்டல்)

என்ன அன்ரி நடந்தது? ..விடியக் காலமை அம்புலன்ஸ் வந்திட்டுப் போகுது..என்ன நடந்தது?

அவருக்கு ஏதும் சுகமில்லையோ?

நல்லாத் தானே இருந்தவர். நேற்றும் பேரனை ஸ்கூலாலை கூட்டிக் கொண்ணந்தவர் .. என்ன இருந்தாப் போலை ..

**கமலம்**

வாரும் வைஷி .. அவருக்கு ஒரே நெஞ்சு நோ .. மூச்செடுக்கவே சரியாக் கஸ்டப்பட்டார். கஸ்டப்பட்டாப் போல .. டிலானா பயந்து போய் அம்புலன்ஸ்'க்கு அடிச்சுக் கூப்பிட்டவள்.

பாவம் பிள்ளை அழுதேபோட்டாள். ...

தம்பி டிலன்!.அக்காவிட்டை கேட்டு ஏதாவது வாங்கிச் சாப்பிடைய்யா

..டிலானா ...தம்பிக்கு கோண் பிளேக்ஸோ .. .. அதைப் பாலுக்கை போட்டுக் குடம்மா ..

அப்பம்மாவுக்கு நாரி நோவு தெரியும் தானே ராசாத்தி..

(உள்ளிருந்து)

**டிலானா**

சரி அப்பம்மா .நான் அப்பப்பாவுக்கு மருந்து குடுத்துட்டு அதைச் செய்யுறன் .டில ன் நீங்கள் போய்க் குளிச்சிட்டு வாங்கோ ப்ளீஸ் ...

**டிலன்**

நான் நேத்துக் குளிச்சனான் .. நான் நாளைக்குக் குளிக்கட்டுமா .. எனக்கு நிறையக் ஹோம்வேர்க் இருக்கு .. ப்ளீஸ் அப்பம்மா ..

**கமலம்**

சரி ராசா .. .நீ நாளைக்குக் குளிக்கலாம்..போய் ஹோம்வேர்க்கைச் செய். படிப்புத்தான் சரியான முக்கியம் உங்களுக்கு ..

டிலன் (மகிழ்வுடன்)

தாங்ஸ் அப்பம்மா..(உள்ளே போய் விடல்)

**வைஷ்ணவி**

பாவம் இந்தப் பிள்ளைகள் .. .. இந்த உலகத்திலை எத்தனை பேர் தங்களுக்கெண்டு பிள்ளகளில்லை எண்டு .. கவலைப் படுகினம் .. ..

ஏன்தான் இந்தப் பிள்ளைகளுக்கு இந்தக் கதியோ? உண்மையாய் எனக்குச் சரியான கவலையாய் இருக்கு அன்ரி..

**கமலம்**

(சுற்றுமுற்றும் பார்த்து .. இரகசியக் குரலில்)

இதாலை தான் இவருக்கு ஒரே வருத்தம் .. மகன் பிள்ளைகள் சந்தோசமாய் இருக்கவேணுமெண்டு எல்லா இடமும் கொண்டு திரியுறதாலை தான் அவருக்கு ஒரே நெஞ்சு நோ..

தாய் தகப்பன் பெத்துப் போட்டு தங்கட பாட்டிலை பிரிஞ்சிட்டினம் .. .. பிள்ளைகள் தான் கஸ்டப் படுகுது ...

**வைஷ்ணவி**

ஏன் அன்ரி இந்தப் பொறுப்பை நீங்கள் ஏற்றனீங்கள்?

**கமலம்**

எனக்கென்ன விசரே .. ..எங்கட மூத்த வாரிசு ஆதி தான் பிள்ளகளைத் தன்னோட வச்சுக் கொண்டு பொஞ்சாதி ரம்யாவைத் திரத்திப் போட்டான்..

ஒண்டும் தெரியாத மாதிரி புதிசாய்க் கேட்கிறீர் வைஷி.

**வைஷ்ணவி**

கோவிக்காதீங்கோ அன்ரி .. என்னெண்டு சொன்னா நான் ஒரு புது வேலைக்குப் போறன் எண்டு சொன்னனான் எல்லோ.. ...அங்கை உங்கட மருமகள் வேலை செய்யிறா ..

**கமலம்**

மருமகள் எண்டு சொல்லவே எனக்கு விருப்பமில்லை..இந்தப் பிஞ்சுகளை விட்டுட்டு என்னெண்டு தான் இருக்கிறாளோ தெரியேல்லை.

**வைஷ்ணவி**

ஆதியையும் இந்தப் பக்கம் காணேல்லை..உங்கடை மகன் உங்களுக்கு போனாவது பண்றாரா அன்ரி?

**கமலம்**

எப்ப தான் இன்னொரு கல்யாணம் செய்யாப் போறன் இலங்கைக்குப் போய் .. எண்டு சொன்னானோ அப்பவே அவனோட கதைக்கிறதிலை வைஷி..

பெத்த பிள்ளை யெண்டாலும் இப்படிப் பொறுப்பில்லாமல் விட்டேத்தியா இருந்தா வெறுப்புத் தானே வரும் .. நீரே சொல்லும்.

**வைஷ்ணவி**

நான் வந்து பிரச்சனையைக் கூட்டுறன் போல இருக்கு. நான் டிலனை ஸ்கூலில கொண்டு போய் விட்டு விடுறன். அதால தான் நான் கடைக்குப் போக வேணும்.

**டிலானா**

அன்ரி .. தம்பி என்னோடை வருவார். நான் அவரை விட்டுட்டு என்ர ஸ்கூலுக்குப் போறன் .. ..சரி தானே அப்பம்மா? அப்பப்பா நல்ல நித்திரை கொள்ளுறார்.

நீங்களும் ஸ்கூல் எடுங்கோ அப்பம்மா .. நாங்கள் போட்டு வாறம்.

**கமலம்**

சரியம்மா .. கவனமாப் போட்டு வாடா .. (தொலைபேசி ஒலிக்கிறது)

**வைஷ்ணவி**

யாரோ போன் அடிக்கினம் கதையுங்கோ ...நான் போயிட்டு வாறன்.

(கமலம் உள்ளே போகிறார்.)

## காட்சி 2

**பாத்திரங்கள் : விமலி, அர்ச்சனா, பாடல் யாவரும்**

**விமலி**

அர்ச்சனா, அர்ச்சனா.. ..

**அர்ச்சனா**

என்னம்மா, ஏன் கூப்பிட்டனீங்கள்?

ஏன் நீங்க இன்னும் ஒருமாதிரியா இருக்கிறீங்கள்? அம்மப்பாவுக்குச் சுகம் வந்துடும். ஓ அப்பாவை நினைச்சா?

அப்பா வந்ததும் நான் அப்பாவைக் கவனிச்சுச் சாப்பாடு குடுக்கிறன். பிளீஸ் அம்மா என்னை நம்புங்கோ!

**விமலி**

அதுக்கில்லை அர்ச்சனா .உன்ரை அப்பாவுக்கு அவர் வரக்கை நான் வீட்டில இருக்க வேணும்..

நான் இப்ப போனா தான் கெதியா வீட்டுக்கு வரலாம். ..அம்மா இரண்டு தரம் போன் பண்ணிட்டா.

**அர்ச்சனா**

எனக்குத் தெரியும் அம்மா. நான் அப்பா வந்தவுடனே அப்பாவையும் கூட்டிக்கொண்டு வாறன். அம்மப்பா பாவம் .. அவர் என்ன மாதிரி இருக்கிறார் எண்டு போய் பாருங்கோ. அது மட்டுமில்ல ..டிலானா, டிலன் இவைக்கும் உதவி தேவை தானே!

**விமலி**

ஓம் அர்ச்சி .. நான் போய் அவையப் பார்க்கிறன் .. நீயும் அப்பாவும் பிறகு வாங்கோ

**(விமலி சென்று விடல்)**

**அர்ச்சனா கவலையில் மூழ்கி விடல்**

**பாட்டு: ஆசை ஆசையாய் இருக்கிறதே, படம் ஆனந்தம்**

ஆசை ஆசையாய் இருக்கிறதே இதுபோல் வாழ்ந்திடவே
பாசப் பூமழை பொழிகிறதே இதயங்கள் நனைந்திடவே
நம்மைக் காணுகின்ற கண்கள் தம்மோடு சேரக் கெஞ்சும்
சேர்ந்து வாழுகின்ற இன்பம் அந்த சொர்க்கம் தன்னை மிஞ்சும்

ஒரு நாட் கூட இங்கு வரமாகும், உயிர் எங்கள் வீடாகும்
சுகமாய் என்றுமிங்கு விளையாடும் நிரந்தர ஆனந்தம்

ஆசை ஆசையாய் இருக்கிறதே இதுபோல் வாழ்ந்திடவே
பாசப் பூமழை பொழிகிறதே இதயங்கள் நனைந்திடவே

ஓ ஓ ஓ நம்தாயின் முகத்தில் ஒரு கோடி கடவுள்
தரிசனம் நாங்கள் பார்த்திடுவோம்

தீபங்கள் கோடி நம் வீட்டில் ஏற்றி
கோவிலைப் போல பார்த்திடுவோம்
அன்னைக்குப் பணிவிடை செய்திடவே ஜென்மங்கள் வாங்கிவந்தோம்
நம் ஜென்மங்கள் மாறும் நேரத்திலும் சொந்தங்கள் சேர்ந்திருப்போம்

அனைவரின் அன்பில் ஆயுளும் கூடிடுமே
ஆசை ஆசையாய் இருக்கிறதே இதுபோல் வாழ்ந்திடவே
பாசப் பூமழை பொழிகிறதே இதயங்கள் நனைந்திடவே

ஓ ஓ ஓ பலநூறு வண்ணம் ஒன்றாகச் சேர்ந்து ஓவியம் போலச் சேர்ந்திருப்போம்
வரலாறு எல்லாம் நம்பேரை நாளை சொல்வதைப் போல வாழ்ந்திருப்போம்
எங்களுக்குள்ளே வளைந்திருப்போம் நாணலைப் போல் தானே

நம்மொற்றுமை காட்டிட நின்றிருப்போம் தூண்களை போல் தானே
அடைமழையாகப் பெய்யும் சந்தோசம் !!

ஆசை ஆசையாய் இருக்கிறதே இதுபோல் வாழ்ந்திடவே
பாசப் பூமழை பொழிகிறதே இதயங்கள் நனைந்திடவே
நம்மைக் காணுகின்ற கண்கள் நம்மோடு சேரக் கெஞ்சும்
சேர்ந்து வாழுகின்ற இன்பம் அந்த சொர்க்கம் தன்னை மிஞ்சும்

ஒரு நாட் கூட இங்கு வரமாகும், உயிர் எங்கள் வீடாகும்
சுகமாய் என்றுமிங்கு விளையாடும் நிரந்தர ஆனந்தம்

## காட்சி 3

**பாத்திரங்கள் : வைஷ்ணவி, ரம்யா, ஆதி**

**(பறவைகளின் ஒலி)**

(வைஷ்ணவியும், ரம்யாவும் வெளிப்புறத்தில் அமர்ந்து இருத்தல்..)

**ரம்யா**

இண்டைக்கு கொஞ்சம் பரவாயில்லை .. .. எங்கட மனேஜர் ரொபின் வராததாலை நாங்கள் தப்பிட்டம் .. .. என்ன வைஷியக்கா...?

**வைஷ்ணவி**

ஓமோம் ரம்யா..சரியாச் சொன்னீர் .. .. ரொபின் வந்தால் நாங்கள் இப்படி ஒன்றாய் இருந்து கதைக்கத் தான் ஏலுமா அதைவிடும் .. .

நான் உம்மோடை கொஞ்சம் கதைக்க வேணும் .. நீர் இப்படி எவ்வளவு நாளைக்கு இருக்கப் போறீர்?

**ரம்யா**

எதைச் சொல்றீங்கள்?

**வைஷ்ணவி**

ஒண்டும் தெரியாத மாதிரி கேட்கிறீர்? உம்முடை பாட்டில நீர் உம்முடை பிள்ளகளை விட்டுட்டு வெளிக்கிட்டிட்டீர்?

பாவம் உம்முடை மாமா மாமி .. .. இந்த வயசில அந்தப் பிள்ளைகளை வளர்க்கிறதெண்டால் சும்மாவா?

**ரம்யா**

அதை பிள்ளைகளின்ர அப்பாவும் அதாவது ஆதியும் அல்லோ நினைக்க வேணும்..

**வைஷ்ணவி**

உங்கடை சண்டையில உங்கடை பிள்ளைகள் அல்லோ பாதிக்கப் படுகினம் ..எனக்கு அந்தப் பிள்ளகைளைப் பாக்கக்கை பெரிய பாவமாப் போச்சு..

வயசான காலத்தில உம்முடை மாமா மாமி தங்களைத் தான் பார்க்க ஏலும்.

**ரம்யா**

அதை அவையின்ர மகனல்லோ நினைக்க வேணும் .. அவருக்கும் கொஞ்சமாவது பொறுப்பு அக்கறை வேணாமா? தொட்டதுக்கெல்லாம் என்னையே குத்தம் சொல்லிக் கொண்டிருந்தா .. எனக்கு வெறுப்பு வராதா? சொல்லுங்கோ..

**வைஷ்ணவி**

உம்முட அவர் யாரை யாவது கலியாணம் கட்டிட்டா என்ன செய்வீர்?? கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தீரே?

ரம்யா

நல்லாச் செய்யட்டும் .. ..

**வைஷ்ணவி**

என்ன ரம்யா இப்படி இரக்கம் இல்லாம நீர் கதைச்சா .. ..

பிள்ளைகளின்ரை எதிர் காலத்தைப் பற்றி யோசிச்சுப் பார்த்தீரோ.. பாவம் பிஞ்சுகள் என்ன பாவம் செய்தது?

**ரம்யா**

அக்கா நீங்கள் இதே கேள்விய அவரிட்ட கேட்டுப் பார்க்கலாமே.. ஏன் என்னை மட்டும் கேட்கிறீங்கள்?

**வைஷ்ணவி**

நான் , நீர் ஒரு பொம்பிளை எண்ட படியால் தான் கேட்கிறன். தாய்க்கு எப்படியும் பிள்ளைகள் மேல ஒரு தனி அக்கறை இருக்கும் தானே ரம்யா..

**ரம்யா**

இது தான் எனக்கு விளங்கேல்லை .. .. ஏன் தான் பொம்பிளை எண்டதும் சமுதாயம் ஒரு மாதிரிப் பார்க்குது? அவருக்குப் பொறுப்புணர்ச்சி இருக்க வேண்டாமா?

எனக்கு இந்த வாழ்க்கையே வேணாம் எண்டு தானே வெளியில வந்தனான். உங்களுக்கு .. தெரியும் தானே அவரின்ர கரச்சல் தாங்க ஏலாமல் தற்கொலை செய்யுற அளவுக்குப் போனனான் ..

தான் வச்சுப் பார்ப்பன் எண்டு சொல்லித்தானே பிள்ளைகளையும் என்னோடை விட மாட்டன் எண்டு ஆதி சொன்னவர்..

**வைஷ்ணவி**

அவரும் பிள்ளைகளை விட்டுட்டுப் போயிட்டார் அதுக்குப் பிறகாவது நீர் பொறுப்பேற்கலாமே..

**ரம்யா**

ப்ளீஸ் அந்தக் கதையை விடுங்கோ .. நான் இதுக்காண்டி தான் உங்களோடை கதைக்கவே விரும்புறதில்லை நான் இப்ப எவ்வளவோ.. நிம்மதியாய் இருக்கிறன்.

**வைஷ்ணவி**

ரம்யா நீர் கோவிக்காதையும் .. .. வாரும் நாங்கள் வேறை ஏதாவது கதைப்பம் .. நான் இனி உம்முடை குடும்பத்தப் பற்றிக் கதைக்க மாட்டன். சரி தானே?

**ரம்யா**

ஹ்ம்ம். சரி வைஷியக்கா .. உங்களுக்கு எப்படி இங்கே வேலை கிடைச்சுது?

**வைஷ்ணவி**

அதோ .. .. எனக்கு முதலிலேயே ஹோம்பேஸிலை வேர்க் பண்ணின அனுபவம் இருக்குதுதானே? அது தான் ட்ரை பண்ணினன் .. கிடைச்சிட்டுது.

## காட்சி 4

**பாத்திரங்கள் : விமலி, அர்ச்சனா, வசந்த்**

**விமலி**

அர்ச்சனா ..இங்கை வா ...இந்த மரக்கறியை வெட்டு. அப்பா வந்தவுடனை நாங்கள் கோயிலுக்குப் போறம்.

**அர்ச்சனா**

அம்மா நாங்கள் மட்டும் தானா போறம்?

**விமலி**

ஓ ஏன் கேட்கிறாய்? வேறை யார் வருவினம் எண்டு நீ நினைக்கிறாய் .. ஓ டிலானா ..

அவையச் சொல்றீயா..?

**அர்ச்சனா**

ஓம் அம்மா .. .பாவம் தானே அவை? அவைய ஒருவருமே ஒரு இடமும் கூட்டி

போறதில்லை தானே .. பாவம் அவை .. இல்லையா அம்மா?

**விமலி**

உண்மை தான் அர்ச்சி .. அவையின்ர அம்மா அப்பா சண்டையில இந்தப் பிள்ளகள்

தான் பாதிக்கப் படுகினம் ..

**அர்ச்சனா**

உண்மை தான் அம்மா .. நான் டிலானாவோடைகதைக்கும் போது எனக்கு பண்ணக் கூடியதாக இருந்திச்சு..மாமா மாமி பிரச்சனையில அவையின்ர பிள்ளைகள் தான் அம்மா பாதிக்கப் படுகினம்.. டிலன் கூட இப்ப சரியா சேஞ்ச் பண்ணிட்டார்..

**விமலி**

என்ன அர்ச்சி சொல்றாய் .. டிலன் சின்னப் பிள்ளை தானே?? ஏன் அப்படிச்

சொல்றாய்?

**அர்ச்சனா**

நான் போனதடவை அவையை பார்க்குக்குக் கூட்டிக் கொண்டு போன்னாங்கள்

எல்லோ?

அப்ப கவனிச்சனான் .. டிலன் பாவம் அம்மா ..

**விமலி**

என்ன அப்படி கவினிச்சனி அர்ச்சி..சஸ்பென்ஸ் வேணாம் கெதியாச்சொல்லு..

அர்ச்சனா

ice cream வாங்குவம் எண்டு van உக்குக் கிட்ட போனால் .. அங்கை டிலனோட முகமே மாறிப் போச்சு..

விமலி

ஏன் ice cream முடிஞ்சு போச்சா?

அர்ச்சனா

இல்லையம்மா .. எல்லாப் பிள்ளைகளுக்கும் அம்மா அப்பா ice cream வாங்கிக் குடுக்க .. டிலனுக்கு ஒரு மாதிரியாப் போச்சு..டிலன் அவரின்ரை அம்மா அப்பாவை மிஸ் பண்ணுறார். ..

விமலி

உண்மைதான் அர்ச்சனா ..எனக்கு விளங்குது அவையின்ரை கஸ்ரம் .. என்ர அண்ணாவுக்கு ஏன் தான் இப்படி அறிவு போகுதோ தெரியேல்லை ..

அர்ச்சனா

அம்மா நாங்கள் அவைய எங்களோடை கொண்டந்து வச்சிருப்போமா? பாவம் அம்மா அவை .. நாங்கள் அவையை ஹப்பியா வெச்சிருக்கலாம் அம்மா ..

விமலி

உஷ்ஷ்ஷ்..அப்பா வாறார் போல இருக்கு .. போய் உன்ர அலுவலைப் பார் ..

அர்ச்சனா

நல்லது, நான் அப்பாவிட்டக் கேக்கப் போறன்.

வசந்த்

ஹலோ people எப்படி இருக்கிறீங்கள்? அம்மாவும் மகளும் ரெடியோ

அர்ச்சனா

அப்பா .. வாங்கப்பா .. நல்ல நேரம் பார்த்து வந்து இருக்கீங்கள் ..

விமலி

அர்ச்சி .. நீ போய்க் குளிச்சு ரெடியாகு ..

வசந்த்

கொஞ்சம் பொறும் விமலி!! .. அர்ச்சி என்ன சொல்றா எண்டு கேப்பம்..

விமலி

டிலானா, டிலன் இவையப் பத்தி தான் கதைச்சிக் கொண்டிருந்தது பிள்ளை..

அர்ச்சனா

அப்பா .. .. நாங்கள் டிலானா, டிலன் அவைய இங்க .. ..எங்களோட கூட்டிக் கொண்டு வந்து வைச்சிருப்பமா?

வசந்த்

அர்ச்சி .. அம்மா ஏது plan சொல்லித் தந்தவவா? (கோபத்துடன்) விமலி நீர் ஏன் பிள்ளையின்ர மனசைப் பழுதாக்கிறீர்?

**அர்ச்சனா**

அப்பா ..ஏன் அம்மாவக் குற்றம் சொல்றீங்கள் .. ஏன் அம்மாவும் .. .. .ஏதும் இப்பிடி உங்களை already கேட்டவவா?

**விமலி**

அர்ச்சி .. அப்பா இப்ப தானே வெளியில போட்டு வந்தவர் .. .நாங்கள் பிறகு கதைப்பம் .. ..என்ன..? நீங்கள் இப்ப போய் வெளிக்கிடுங்கடா ..

**அர்ச்சனா**

சரி அம்மா .. ..எந்த கலர் பஞ்சாபியைப் போடுறது..?

**விமலி**

நான் iron பண்ணிக் கட்டிலிலை வச்சிருக்கிறன்.. நீங்கள் முகம் கழுவிட்டு வாங்கோ .. ..நான் tea போடுறன்.

## காட்சி 5

பாத்திரங்கள் : விமலி, கமலம், Social service ஆட்கள், teachers

**விமலி**

அம்மா நீங்கள் தனியாக் கஸ்டப் படாதையுங்கோ .. .. நான் வரேக்கை என்னால முடிஞ்சளவு சாப்பாடு செய்து கொண்டு வாறன் ..

உங்கட வயசில rest எடுக்கிறது சரியான முக்கியம் .. .. .நாங்கள் சின்னப் பிள்ளைகளாயிருக்கக்கை நீங்கள் பட்ட பாடு போதும் அம்மா ..

**கமலம்**

எனக்கு சும்மா இருக்க விருப்பமில்ல .. .இஞ்சை அதிகம் வேலை இல்லைத் தானே ஊரிலை எண்டால் .. ...விறகை வச்சு ....ஊதியே ..உள்ள சக்தியெல்லாம் போயிடும் ...

இஞ்சை அப்படி இல்லை தானே..

**விமலி**

எண்டாலும் எங்கடை நாட்டிலை .. போராலை பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமே .. ..நாங்கள் உங்களுக்கு உதவுறமோ இல்லையோ இந்தப் பிள்ளகள் பாவம் தானே அம்மா ..நீங்கள் அப்பாவுக்கு உதவியா இருக்கிறதோ அல்லது .. இந்த இரண்டு பிள்ளைகளைப் பார்க்கிறதோ..

**கமலம்**

உண்மை தான் .. டிலானா பொம்பிளைப் பிள்ளை தானே ஆனால் தம்பி டிலன் தான் .. படிக்கிற மாதிரி எனக்குத் தெரியேல்லை..

இவரும் .. இப்ப ஊளஉம தானே .. அதுக்குப் பிறகு .. ஆள் கொஞ்சம் குழப்படி எண்டு நினைக்கிறன்

**(கார் வந்து நிற்கும் சத்தம்)**

**விமலி**

பொறுங்கம்மா .. ..ஒரு கார் வந்து நிற்குது ...இரண்டு பேர் வாற மாதிரி இருக்குது ...

**கமலம்**

என்ன பிள்ளை சொல்றாய் .. எங்கடை சொந்தக் காரர் ஆரும் வருகினமோ? ..

விமலி

இல்லை அம்மா ... சோஷல் சேர்விஸ் ஆக்கள் போலை இருக்குது .. டிலனின்ரை class teacher உம் வாறா..

**கமலம்**

என்ன பிள்ளை இண்டைக்கும் இவை வருகினம் ..எனக்கு ஒரே பதட்டமா இருக்கு

**விமலி**

அம்மா கொஞ்சம் பேசாமல் இருங்கோ .. .நான் கதைப்பன் .. நீங்கள் கொஞ்சம் பேசாமல் இருங்கோ please.

அழைப்பு மணி ஒலிக்கிறது.

**Social worker**

Hello

**விமலி**

Hello

**Social,Worker**

I am Johan William from Social Services

I am from Social Services of Haringey Council

This is Miss Ranjani

Class teacher of Dilan

We are here to give some advice regarding Childrens behaviour

**Class teacher**

I have been teaching Dilan last three years. I can see he is not concentrating his studies now as before.

I can see he has changed a lot.

(பின்னணி இசை ஒலிக்க ...வந்தவர்களுடன் விமலி சர்ச்சிப்பது போன்ற காட்சி )

**கமலம் (அழுகையுடன்)**

விமலி என்னவாம் பிள்ளை சொல்றாங்கள் என்ன சொல்லுகினம்?

**விமலி**

டிலன் ..இப்ப எல்லாம் .. .கொஞ்சம் கடுமையா நடந்து கொள்றானாம் .. இப்படியே போனால் இவரைத் தங்கட கண்காணிப்பில வச்சிருக்கப் போகினமாம்..

**கமலம்**

அய்யோ இதென்ன கொடுமை .. ..இப்படி நடக்கக் கூடாது எண்டதுக்காகத் தான் இவ்வளவு பாடு பட்டம் .. அப்ப டிலானாவை என்ன செய்வினம்?

**விமலி**

இதென்ன புதுக்கேள்வியம்மா? டிலானாவும் சினைப் பிள்ளை தானே .. பதினெட்டு வயசு மட்டும் அவை தான் வெச்சிருப்பினம்

**கமலம்**

ஐயோ .. நான் என்ன செய்ய ..இந்த விசயம் கேட்டாலே உன்ரை அப்பா செத்துப் போடுவார்

**விமலி**

அம்மா சும்மா யோசிக்காதையுங்கோ.. .. எல்லாம் நல்ல படியா நடக்கும்... நான் அப்பாவுக்கு விளங்கப் படுத்துவன்.

**கமலம்**

பிள்ளை எனக்கேதோ செய்யுது .. கொஞ்சம் தண்ணி கொண்டு வா .. .

### காட்சி 6

**பாத்திரங்கள் : அர்ச்சனா, விமலி, டிலன், அர்ச்சனா, குணசேகரம், டிலானா, கமலம், வசந்த், ரம்யா, ஆதி, Social Workers**

(அர்ச்சனாவும் விமலியும் அமளி துமளியாக செயற்படல்...)

**டிலன்:**

மாமி நாங்கள் எங்கை போறம் .. .. ஏன் நாங்கள் ...போறம்.. நாங்கள் அப்பம்மாவோடை இருக்கேலாதோ?

**விமலி:**

ராசா இப்ப அவையோடை போனீங்கள் எண்டாத் தான் நீங்கள் அப்பம்மாட்டை அடிக்கடி வந்து போகலாம்

**டிலன்:**

மாமி நான் போகமாட்டேன் .. அக்காவும் என்னோடை வருவாவோ! யார் தான் வந்தாலும் .. எனக்கு இங்கை தான் இருக்க விருப்பம்.

**அர்ச்சனா:**

டிலன் நீங்கள் அப்படிச் சொன்னாப் பிறகு அப்பம்மாவையோ எங்களையோ

பார்க்க ஏலாமப் போயிடும் please understand !!

**டிலன் :**

ஏன் நான் என்ன செய்தனான். .. .. .. ..

**கமலம்:**

என்னாலை இதையெல்லாம் பார்க்க ஏலாது.

**குணசேகரம்:**

சும்மா இரும் கமலம்! பிள்ளைகளை கவலைப்படுத்தாதையும் !!

பெரிய ஆக்கள் நாங்கள் பிறகு கதைக்கலாம். அவைக்கு நீர் தான் உசாரா இருக்கவேணும்.

**டிலானா**

மாமி நீங்கள் எங்களோடை phone பண்ணுங்கோ எனக்கு ஒரே பயமா இருக்கு.

நாங்கள் என்ன குற்றம் செய்தனாங்கள் அம்மா அப்பா தங்களுக்கு

இருக்கிற பிரச்சினையை எங்கட மேல போட்டிட்டினம்..

**டிலானா (அர்ச்சனாவைப் பார்த்து)**

நீங்கள் lucky உங்களுக்கு நல்ல parents .. .. நாங்கள் unlucky .. என்ன அர்ச்சி அக்கா .. ?

**விமலி**

அப்படிச் சொல்லாதீங்கோ டிலானா நாங்கள் உங்களை அடிக்கடி வந்து பார்ப்பம்

**அர்ச்சனா**

அம்மா .. அவை வந்துட்டினம் .. .. அது தான் social service ஆக்கள் வந்திட்டினம்.

**விமலி**

போய்க் கதைச்சிக் கூட்டிக் கொண்டு வா .. ..

**அர்ச்சனா**

சரி அம்மா ...

(அர்ச்சனா .. டிலானாவைக் கட்டிக் கொள்ளல் ..)

**டிலானா (வெளியே எட்டிப் பார்த்தபடி)**

அப்பம்மா, அப்பப்பா நாங்கள் போகப் போறம்

**கமலம்**

அப்படிப் போறம் எண்டு .. சொல்லக் கூடாதம்மா .. போட்டு வாறம் எண்டு சொல்லுங்கோ (அழுதல்)

**குணசேகரம்**

கமலம் ..இஞ்சாலை வாரும் ..

**கமலம்**

எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை... நீங்கள் .. ஆறுதல் சொல்ற மாதிரி இருப்பீங்கள்...
பிறகு நீங்களும் திடீரெண்டு ஆஸ்பத்திரிக்குப் போயிடுவீங்கள்...

(கதவு தட்டப்படுகிறது.)

**வந்தவர்**

ஹாய் எவ்ரி வண்

**விமலி**

ஹாய்

**வந்தவர்**

Are you ready to leave ?

Don't cry mom...Your grand kids will be very safe..

Sorry, We are doing our duty...

Someone is knocking the door...

**ரம்யா** (அழுத படி உள்ளே வருதல்)

Hello

I am Ramya...Mom of Dilana and Dilan...

I cant leave my kids....

I want my children with me...

**வந்தவர்**

You should have thought it earlier..

**ரம்யா**

That is the mistake I have done..

I wont leave my kids anywhere...

**வந்தவர் :**

Sorry Maam... we need to see what our manager says..

(இசை ஒலிக்க வாக்குவாதம் நகர்கிறது)

(ரம்யா .. விமலி ஆகியோர் வந்தவர்களுடன் வாதிடல் போன்று நடித்தல்)

**கமலம்**

என்னவாம் பிள்ளை சொல்லுகினம்??

**விமலி**

அம்மா .. பொறுங்கோ ..அவை மேலிடத்தில கதைக்க வேணும்மாம்.

**கமலம்**

ஏன் .. என்னத்துக்கு .. தாய் வந்த பிறகும் ஏன் அவை மாட்டினமாம்

**ரம்யா**

மாமி என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ ..நான் போனாலாவது அவர் திருந்துவார் எண்டு நான் நினைச்சன் ..

**குணசேகரம்**

பிள்ளை அதைப் பத்தி பிறகு கதைக்கலாம் என்ன நடக்கப் போகுது? எண்டு பார்ப்பம்.

**விமலி**

அப்பா . நீங்கள் ஒண்டும் யோசிக்காதையுங்கோ .. அவை அப்படி பொல்லாதவை இல்லை .. நாங்கள் அவையோடை போய்ப் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வரலாம்.. வசந்த் வாறார்..இவையோடை போய்க் கதைக்கிறதுக்கு..

**டிலன்**

அம்மா அங்கை பாருங்கோ .. அம்மா அங்கை பாருங்கோ..

**டிலானா**

அப்பம்மா ..அப்பா வாறார்..

**ஆதி**

அம்மா .. என்னை மன்னிச்சிடுங்கோ .. நான் நல்லா உணர்ந்துட்டன் .

**குணசேகரம்**

வாழ்க்கை எண்டால் விளையாட்டில்லை. மருமகன் வசந்தைப் பார். எப்போதுமே நீண்ட பார்வை, நிதானமான செயல். மனிசராகப் பிறந்தவனுக்கு கட்டாயம் இதெல்லாம் தெரிஞ்சிருக்க வேணும்.

தம்பி .. உன்னாலை உன்ர பிள்ளைகளும் ரம்யாவும் ..சரியாக் கஸ்ரப் பட்டிட்டினம்..

**(கதவு தட்டப்படுகிறது)**

**ரம்யா**

வாங்கோ வைஷியக்கா உங்களுக்கு வாழ்நாள் முழுக்கக் கடமைப் பட்டிருக்கிறன்.

**வசந்த்**

எல்லாம் போகட்டும் .. நான் விசயத்தைச் சொன்னதும் ஆள் அழுதே போட்டுது .. பிள்ளைகள் எண்டா சும்மாவா???

வாங்கோ டிலானா, டிலன்.. உங்கடை அம்மா அப்பா உங்களிட்டையே வந்திட்டினம்...

அர்ச்சி எங்கை .. அந்த கமராவைக் கொண்டு வா .. நாங்கள் எல்லாரும் படம் எடுக்க .. ஏன் எண்டால் இது நல்ல நாள்!

**(எல்லோரும் சிரித்தல்)**



# தழும்பல்கள்

அவசர வாழ்விலே
அமுங்கிப் போனது
ஆனந்த சுவாசிப்புகளுமே
பணம் ஈட்டுவது என்பதும்
எளிதாய்ப் போனதால்
வாழ்வின் அர்த்தமும்
எளிய பதிரென ஆனது

உறவுகளின் உன்னதமும்
உணர்வுகளும் கூட
கிள்ளுக்கீரையென ஆனதால்
சுயநலமொன்றே பெரிதென ஆனது
சுயமைத்தனம் தாண்டவம் ஆடின
காயங்கள் தான் கடைசியில் எஞ்சின

பிஞ்சுகள் நெஞ்சிலே நஞ்செனக் கவலைகள்
கிஞ்சித்தும் எண்ணாத வஞ்சகப் பெற்றோரால்
பஞ்செனக் காற்றிலே பிள்ளைகள் எதிர்காலம்
பறந்திடும் அபாயமே! பறந்திடும் அபாயமே!

சிந்தித்தே செயற்படுவோம்
சந்ததிகள் சிறப்புறவே!!

## இணைவோம் ஒன்றாய்

கார்த்திகை மாதம் வந்ததும் நெஞ்சில்

அலையலையாய் ஆர்த்தெழும் நினைவுகளே!

வார்த்தையில் வடிக்கவொண்ணா வலிநிறை துன்பம் ~ மனம்

உலையில் இட்டவரிசியாய் கொதிக்கும்! கொதிக்கும்!

என்னதான் நாம் கண்டோம் எம் வாழ்வில்

இழப்பைத் தவிர என்று தான் சலிக்கத் தோன்றும்!

இல்லையில்லை எமக்குண்டு விடிவு தீர்க்கமாய்

எப்போதும் சாகாது உண்மை என்று இடித்துச்சொல்லும் உள்ளம்!

தாமுண்டு தம்பாடுண்டு என்றமராமல்

நாமுண்டு, எம்மினத்துக்காய் என ஒருமனதாய்

தாமாக முன்வந்து, நம்முயிரையும் தருவோம் என்று

உடலையும் உயிரையும் தாரைவார்த்த வள்ளல்களே!

வாழவேண்டிய வயதில் சூழவுள்ள சொந்தங்கள் துயர்கண்டு

வேளாவேளை சுகங்களை விடுத்து விடுதலை வேண்டி

வேளையோடே விட்டீர்களே இவ்வுலகை,

இளவயதில் வேண்டுமா இது!

மாளவில்லை நீவிர் மாணிக்கங்களே! மறுகுகின்றோம்!

உங்கள் தியாகங்கள் உன்னதமானவை என வெறுமனே
உதட்டளவிலே உச்சரிக்க தயாரில்லை நாம்!
சிங்களவரசு செய்த, செய்யும் கொடுமையுண்டு எம் மனதில்
பதட்டமின்றி பகைவனை முறியடிப்போம் இணைந்தே!

கற்றவன் கல்லாதவன் உற்றவன் அற்றவன் என்றபேதம்
சற்றேனும் கொள்ளாது மனதில் உற்றது வேள்வியென ~ தேசப்
பற்றே காரணமாய், பற்றி நின்றீர் அண்ணன் பிரபாகரன் வழி
பறைசாற்றி நின்றீர் தமிழன் திறன்! ஏற்றி நின்றீர் புகழ்க்கொடி!

நாட்டினுள்ளே நாடுகண்டீர்! நல்லரசு காட்டி நின்றீர்!
ஓட்டிவென்றீர் பல இராணுவ முகாம்! உயிரைக்கூடத் துச்சமென
காட்டியெதிரிதனை கலங்க வைத்தீர்! களங்கள் பல கொண்டீர்!
மீட்டிநாம் பெருமைகொள்ளுமளவுக்கு பாரியதுன் தீரம்நம்ரத்தங்களே!

பச்சைவயவுள் பெருநாகம் வளர்ந்தது எங்கனம்? ~ நாம்
முன்செய் செய்த பாவம் தானோ? ~ சிங்களன்
பிச்சைகொண்டுதன்னுயிர் சுமக்க பிள்ளையான், கருணா
என உருவெடுத்தனரோ? இவர்கள் துரோகத்தாலே
அச்சமின்றி சிங்களவன் வலைவிரித்தான் இநான்கு நாட்டுத்துணயுடனே
பச்சிளம் பாலகர் முதல், பருவக்குமரிதனைப் பதம்பார்த்தான்,
மறக்கலாமோ! மறப்போம் தானோ மறந்தால் நாம் தமிழர் தானோ!

மைல்கள் பலகடந்து விட்டோம்!
மணிக்கணக்காய் உழைக்கின்றோம்
அமைக்க ஆயிரம் பணிகள் உண்டு! ~ எனச்
சுணக்கம் கொள்ளல் நியாயம் தானோ?
அணிதிரண்டோம் ஆயிரக்கணக்காய் ஆகவில்லை எதுவுமென
அலுக்கலாமோ? அசதிதான் கொள்ளலாமோ?

அசாத்தியமாய் முடிவெடுத்து ஆடிநின்ற சமராலே
அத்திவாரமாய் தம்மின்னுயிர் தன்னை
ஆகுதியாக்கிய நம்மைந்தர் பாட்டினை நாமும்
உயிருள்ளளவும் ஒதுக்கலாமோ எம் சிந்தையிலிருந்து?
ஒதுக்கினால் நாம் மனிதர் தானோ!

எம்மைந்தர்கள் எமக்காய் தம் இளமைதனை, உறவுகள் தனை விடுத்து
உரிமைதான் தமிழன் உடமையாக வேண்டுமென
உயிர்தன்னை அம்பாய்த் தொடுத்தவர்கள்
உத்தமர்கள், ஏற்றவேண்டும் அவர்கள் கனவுத்தீபம் தன்னை
அடைந்தே கொடுக்க வேண்டும் இந்தமிழீழம் இவர்கள் பாதங்களில்!

ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் எமக்குள்
ஆகவேண்டியதென்னவோ ஒன்றுதான் இல்லை வேறுகருத்து
ஆகவே பாடுபடுவோம் ஒன்றாக அமைப்போம் தமிழீழம்
அதுவேதான் ஆகுதியான எம்மாவீர செல்வங்களின் ஒருமித்த விருப்பமன்றோ!

அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சென்றுவிட்டாயிற்று எம்போராட்டம்

படித்த வெம்பிளைய சமுதாயம் படைக்கட்டும் புதிய அத்தியாயம் ~ அதை

விடுத்து வேண்டாம் எமக்குள் நானா, நீயா பெரிது என்ற வீண்வாதம்

பிடிப்போம் ஒற்றுமையாய் 'ஒன்றிணைந்த செயற்பாடு' என்ற தேரினையே!



**அம்மா நீ வாழ்க!**

மணியே மணிக்கவியே

மாண்புள்ள மாதரசே!

கனியே கற்கண்டே

கட்டாணி முத்தளகே!

காலத்தால் அழியாத

காதல் கனியமுதே!

கண்ணே என்சொல்லை

கடுகளவு கேளம்மா!

அன்புநிறை செல்வாக்கும்

அறிவுள்ள சொல்வாக்கும்

பண்பு வளர் பகுத்தறிவும்

பாரிலுயர் பலநோக்கும்

ஆயகலை அகத்தேக்கி

ஆதவனாய் ஒளிவீசி

உலகெங்கும் புகழ் சேர்த்து

உன்னதமாய் நீ வாழ்க!

சிவம் ~ பரமலிங்கம்

## நாளும் என் வாழ்வு

காலமெலாம் கற்றறிந்த
கல்வியின் துணையுடனே
உலகம் வலம் வந்து
உன்னிப்பாய் நானறிந்த
உண்மைகளை மென்மைகளை
உளமாரச் சிந்தித்து,
கற்பனைக் கண்ணூடாய்
கழித்த கவிதைகளை
கன்னியரும் காளைகளும்
கற்புடனே வாழுதற்கு
ஏற்ற முறையினிலே
எடுத்துரைத்து என்பொழுதை
தவப்பொழுதாய் பயன்படுத்தி
தனிமையில் வாழுகின்றேன்.

எனக்கென்று அமைந்துள்ள இதமான
ஏகாந்த மாளிகையில்

பாலோடு கனிவகையும் பருப்பும்
பதமான கறிவகையும்

பக்குவமாய் நான் சமைத்து பங்கிட்டு
பகலிரவு உண்ணுகிறேன்

பாடங்கள் ஆங்கிலம் படிப்பிப்பேன்
படங்கள் பார்த்திடுவேன்

பாட்டிக்குப் போய் வருவேன்
பபாவுடனே சமர் தொடுப்பேன்

படங்கள் எடுப்பதுவும்
பாக்குக்குப் போவதுவும்

தடங்கல் இல்லாமல்
தபால்கள் போடுவதுவும்

அண்டை அயலவரை
அன்புடனே பேணுவதுவும்

தக்க தருணத்தில்
சமாதானம் பேசுவதும்

சிந்தனையைத் தூண்டும்
சிறுகதை எழுதுவதும்

சிறந்த பணியாக
துறந்தே மனம் குளிரும்

என்ன தான் செய்தாலும்
என் வீட்டு வட்டத்தில்

என்னருமை உயிர்களை
எண்ணாத வேளையில்லை

கண்ணின் மணியிரண்டும்
கண்ணுள்ளே வளர்கிறது.

## தந்தையின் தவிப்பு

வீட்டினுள் அடைந்திருக்கும்

கூண்டுக் கிளிஒன்று

தாயின் துணையுடனே

தனியாய் தினமிருந்து

தானாகப் பறப்பதற்கு

தவியாய் தவிக்கின்றாள்

காலத்தின் கோலமிதோ

கடவுளின் தண்டனையோ

பாவையின் உடல் முழுவதுவும்

படிந்து விட்ட நோயினாலே

பலகாலம் வாடுகின்றார்

பரிதவித்து ஏங்குகின்றார்

பறவையின் அப்பாவும்

பரிவுள்ள அக்காவும்

பண்புள்ள அண்ணர்களும்

பிறநாடு சென்றதனால்

ஏங்கித் தவிக்கின்றான்

எப்போதும் அழுகின்றான்

வரவை எதிர்பார்த்து

வாடுகின்ற பொன்மயிலாள்

வதனியை வரவழைக்க

வழிதேடிப் பாடுபடும்

வல்லமைகள் எப்போது

வரம் தருமோ நாமறியோம்.

## மாமணிக்கு என் மனமார்ந்த வாழ்த்து!

என்னருமை மாமணியே ~ துணையாளே!
எனதாசைக் கண்மணியே!

என்றுதான் எம் துயரம் ~ எமைவிட்டு
ஏகுமோ நானறியேன்!
அன்று வரை எப்படியும் ~ எங்களை
அப்பன் தான் காக்க வேண்டும்.

அன்பே உன் மூச்சாகி,
அறிவே உன் துணையாகி
பணிவே உன் பண்பாகி
பாரில் உயர் பெண்ணாகி
இணைந்து என் துணையாகி
வந்த என் சரஸ்வதியே!

துன்பம் துயர் தாங்கி
துணிந்து பணி யாற்றி
இன்பம் என்னாளும் தருபவளே!
இணையற்ற எனதருமை மனையாளே!
கண்ணின் மணிபோன்று என்றும்
காப்பார் கடவுள் நன்றாய்!

என்றும் உனது உயிர்........சிவம் ~ பரமலிங்கம்

'யார் இவள்' கவிதைக்கு இணையம் தான் பதில்





எங்களன்னையின் 75 ஆவது அகவையின்
பிறந்த நாளுக்காய் அப்பாவின்
அன்றைய கவிதைகளுடன் எனது அன்பளிப்பு இந்த மலர்.

நிலா